விலை ரூபா: 15.00


# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 12 திங்கட்கிழமை (26.03.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 97



RAMCO CEMENT

கோ

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து


# கட்டுநாயக்க விமான நிலையம் மீது

பிந்திய செய்தி

# இன்று அதிகாலை தாக்குதல்!

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையம்மீது இன்று அதிகாலை 1.30 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. விமானத் தளத்தினுள் மோட்டார்த் குண்டுச் சத்தங்களும் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்களும் கேட்டுக் கொண்டிருந்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

தாக்குதல் சத்தங்கள் கேட்டவுடன் விமான நிலையத்தில் நின்ற அனைவரும் சிதறியோடியதாகவும் தாக்குதலையடுத்து அனைத்து விமான சேவைகளும் இடை நிறுத்தப்பட்டதுடன் விமான நிலையத்திலிருந்து எவரையும் வெளியே செல்ல அனுமதிக்கவில்லை எனவும் கூறப் பட்டது.

அதேவேளை பெருமளவான இராணுவத்தினர் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளதுடன் விமானப்படை விமானங்களும் வானில் வட்டமிட்டுக் கொண்டிருப்பதாகவும் குண்டுச் சத்தங்களைத் தொடர்ந்து விமானத்தளம் புகைமண்டலமாக காட்சியளித்ததாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.இத் தாக்குதலில் விமானப்படை வீரர்கள் இருவர் கொல்லப்பட்டதுடன் 17 பேர் (04 ஆம் பக்கம் பார்க்க)

## இடம் பெயர்ந்துள்ள மக்களின் உயிர் பாதுகாக்கப்பட வேண்டும்

### ஐக்கிய நாடுகள் சபை வேண்டுகோள்

(கொழும்பு)

இடம் பெயர்ந்துள்ள மக்களின் உயிருக்கு பாதுகாப்பு வழங்குவது அனைவரது பொறுப்பும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. ஓமந்தைப் பகுதியில் இடம் பெற்ற மோதல்கள் காரணமாக 10 ஆயிரம் பொது மக்கள் இடம் பெயர்ந்து மடு தேவாலயப் பகுதியில் தங்கியுள்ளனர்.

கடந்த சில மாதங்களாக இடம் பெற்ற மோதல்களில் இடம் பெயர்ந்து தங்கியுள்ள மக்களின் உயிர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென ஐ.நாவின் பேச்சாளர் கின்டொன் தெரிவித்துள்ளார்.

எந்தத்தரப்பு தாக்குதல் நடாத்தினாலும் மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மக்களை எந்தவித ஆபத்துக்களிலும் சிக்க வைக்காமல் இருப்பதற்கே மோதல்களை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் தீர்வொன்றை ஏற்படுத்துமாறு தான்கருதுவதாக பேச்சாளர் தெரிவித்தார். (ஏ)

## பசில் ராஜபக்ஷவுக்கு கட்டுமான அமைச்சுப் பதவி

(கொழும்பு)

ஜனாதிபதியின் சகோதரரான பசில் ராஜபக்ஷவுக்கு கட்டுமான அமைச்சுப் பதவியை வழங்குவதற்கு ஜனாதிபதி முடிபுசெய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேர்வின் சில்வா தனது நாடாளுமன்ற பதவியை துறந்ததும் அவரது பதவிக்கே இவர் பதவியேற்பார் எனத் தெரியவருகிறது. (எ-1)

## சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர் ஒருவர் மட்டக்களப்பில் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார். சுட்டுக்கொல்லப்பட்டவர் கந்தப் போடி சபாரட்ணம் (வயது 70) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் அவரது வீட்டுக்கு முன்னால் வைத்து அவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சைக்கிளில் சென்ற இருவரே அவர் மீது துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஏ)

## உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து மங்கள விரைவில் வெளியேறவுள்ளார்

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தமது பாதுகாப்பு உட்பட பல்வேறு காரணங்களை கவனத்திற்கொண்டு இரண்டு வாரங் களுக்குள் தமது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து இடம் பெயரவிருப்பதாக தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தற்போது உத்தியோகபூர்வ இல்லமான கெப்பெட்டிபொல மாவத்தை கொழும்பு 7 இல் அமைந்துள்ள இல்லத்தில் வசித்து வருகின்றார். தனக்கு தற்போது கொழும்பு நகர பிர தேசத்தில் வாடகை வீடு ஒன்றினை பெற்றுக் கொள்ள முயற்சித்து வருவதாக தெரிவித்த அவர், (04 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல்கள் குறித்து பவ்ரல் அறிக்கை சமர்ப்பிக்கும்

### அதன் தலைவர் தெரிவிப்பு

காணாமல் போதல், ஆட்கடத்தல், சட்ட விரோத கைதுகள் என்பன குறித்த அறிக்கை ஒன்றினை அடுத்தமாதம் வெளியிடவுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. இச் சம்பவம் தொடர்பாக பல்வேறு அமைப்புக்களுடனும் தனி நபர்களுடனும் தொடர்பு கொண்டு தகவல்கள் பெறப்படுவதாகவும் அவை நிறைவடைந்தும் அறிக்கை தயாரிக்கப்படும் என பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸிலி றொட்டிக்கோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை கைதுகள், காணாமல் போதல் மற்றும் சுட்டுக்கொல்லப்படுதல் தொடர்பாக சுமார் 800 முறைப்பாடுகள் தமக்குக்கிடைத்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இம் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு போதுமான சாட்சியங்கள் இல்லாதிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் மனித உரிமை மீறல் களைத் தடுப்பதற்கு மனித உரிமைகள் ஆணைக் குழு நடவடிக்கை எடுக்கவேண்டுமென பவ்ரல் அமைப்பு கேட்டுள்ளது. (ச)

## சிறிபதி எம்.பியின் கைது குறித்து சபாநாயகரிடம் ரணில் பேசுவார்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிறிபதி சூரியாராட்சி கைது செய்யப்பட்டமை தொடர்பாக கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிவான் ,பொலிஸ்மா அதிபர், இரகசிய பொலிஸ் பிரிவின் பிரதி பொலிஸ்மா அதிபர் ஆகியோரை அழைத்து காரணத்தை கண்டறியுமாறு சபாநாயகரிடம் விடுக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட போதும்,

அது குறித்து எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாதமை குறித்து எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க சபாநாயகர் வி.ஜே.மு.லொக்குபண்டாரவை சந்தித்து உரையாடவுள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்றொழிலுக்குச் செல்ல இன்னமும் அனுமதியில்லை

### மீனவர்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் கடந்த மாதம் 20 ஆம் திகதி முதல் சுமார் 20 நாட்கள் விதிக்கப்பட்டிருந்த மீன்பிடி தடையுத்தரவு கடந்தவாரம் இராணுவ அதிகாரிகளினால் நீக்கப்பட்ட போதிலும்,மீனவர்கள் தொடர்ச்சியாகக் கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை என அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.மீன்பிடித் தடை நீக்கப்பட்டு இரண்டு வாரங்களாகிவிட்ட போதிலும், இடையிடையே முன்னறிவித்தலின்றி நிறுத்தப்பட்டு இதுவரையில் சுமார் 6 தினங்கள் மாத்திரமே மீனவர்கள் கடலுக்குள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் கூறுகின்றனர்.

வடமராட்சிகடற் (04 ஆம் பக்கம் பார்க்க)



உலகக் கிண்ணத்திற்கான லீக் போட்டியில் இந்திய கிரிக்கெட் அணி, இலங்கை அணியிடம் தோல்வியுற்றதால் ஆத்திரமடைந்த இந்திய அணி ரசிகர்கள், அந் நாட்டு கிரிக்கெட் வீரர்களின் படங்களை தீயிட்டுக் கொளுத்துவதை படத்தில் காணலாம்.

## யாழ்.நகர மத்தியில் வைத்து 3 இளைஞர்கள் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பஸ்நிலையப் பகுதியில் நேற்று நண்பகல் 12.45 மணியளவில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மூன்று இளைஞர்கள் உயிரிழந்தனர். இவர்கள் மூவரும் நகரப் பகுதியில் நடைபாதை வியாபாரம் நடாத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் இடம் பெற்றபோது இவர்கள் மூவரும் உணவகம் ஒன்றில் உணவருந்திக் கொண்டிருந்ததாகவும் அவ் வேளை அங்கு வந்த ஆயுததாரிகள் அவர்களை சுடமுயற்சித்துள்ளனர்.அப்போது ஒருவர் தப்பி ஓடிய போது யாழ்.மத்திய பஸ்நிலையத்துக்கு முன்பாக வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மற்றைய இருவரும் பஸ் நிலையத்துக்குப் பின் புறமாகவுள்ள உணவகம் ஒன்றிற்குள் வைத்து ஆயுததாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

## அவுஸ்திரேலியா அபார வெற்றி; தென்னாபிரிக்காவின் போராட்டம் வீண்

தென்னாபிரிக்காவை அவுஸ்திரேலியா அதிரடி வெற்றி பெற்றதுடன் ஹைடன் சாதனைச் சதமும் அடித்துள்ளார். மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணத் தொடரில் சென்கிற்ஸில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்க அணிகள் மோதின. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் ஸ்மித் முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஹைடனின் ஆரம்ப அதிரடி ஆட்டத்தினால்50ஓவர்களில்6 விக்கெட்டுக்களையிழந்து 377 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மத்யூ ஹைடன் 68 பந்துகளில் 101 ஓட்டங்களையும் கிளார்க் 92 ஓட்டங்களையும் பொன்டிங் 91 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக அன்ரூ ஹோல் 2விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 378 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்கா, ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஸ்மித், வில்லியர்ஸின் அதிரடி போராட்டத்தினால் வெற்றி நோக்கி சென்ற போதும் நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரர்கள் ஜொலிக்காத நிலையில் 48 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 294 ஓட்டங்களைப் பெற்று 64 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் துடுப்பாட்டத்தில் வில்லியர்ஸ் 92 ஓட்டங்களையும் ஸ்மித் 74 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் அவுஸ்திரேலியா அணி சார்பாக ஹொக் 3 விக்கெட்டுக்களையும் பிறேக்கன், ரைட் ஆகியோர் தலா 2விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இப் போட்டியில் 66 பந்துகளில் 100 ஓட்டங்களைப் பெற்று உலகக் கிண்ணத் தொடரில் குறைந்த பந்துகளில் சதத்தைப் பெற்ற வீரர் என்ற பெருமையை அவுஸ்திரேலிய அணியின் மத்யூ ஹைடன் சாதித்துள்ளார். (ச-5)


அனுசரணை:-

பொலிஸ் அறிக்கை தேவையில்லை

24 மணி நேரமும் சேவை நிலையம்

24மணித்தியாலத்திற்குள் 75% இழப்பீட்டுக் கொடுப்பனவு

FORMULA PLUS Motor Insurance

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸிடமிருந்து

Sri Lanka Insurance

நாடெங்கிலும் சேதங்களின் சரியான மதிப்பீடு திருத்தங்களுக்கு அனுமதியும்

மூன்று நாட்களுக்குள் முழு இழப்பீட்டுக் கொடுப்பனவு

24 மணித்தியாலமும் நாடெங்கிலும் இலவச வீதியோர உதவி

தொடர்புகளுக்கு 021 222 2023


# உலகக் கிண்ணப் போட்டிக்காக கொழும்பிலும் சூதாட்டங்கள்

(கொழும்பு)

மேற்கிந்தியத் தீவுகளில் இடம்பெற்று வரும் உலகக் கிண்ணத்துக்கான ஒவ்வொரு போட்டியின் போதும் இலங்கையில் இலட்சக் கணக்கான ரூபாவுக்கு சூதாட்டம் இடம்பெறுகின்றது.


அதிகபட்சமாக நடைபெற்று முடிந்த இலங்கை - இந்திய போட்டிக்குக் கொழும்பில் இருதரப்புக்கிடையே தலா 7 லட்சம் ரூபா பந்தயம் கட்டப்பட்டது.

இந்திய அணி இலங்கையிடம் தோற்றதால் இந்திய அணிக்காகப் பந்தயம் கட்டியவர்கள் மேற்படி 7 இலட்சம் ரூபாவை இழந்திருக்கின்றனர் என்று நம்பகமாக தெரியவருகின்றது. அதேபோல் பாகிஸ்தானுக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இடையில் நடைபெற்ற போட்டியின்போது பந்தயமாக முச்சக்கர வண்டி ஒன்று முன்வைக்கப்பட்டது.மேற்படி போட்டியில் பாகிஸ்தான் தோல்வியுற்றதால் அந்த அணிக்காகப் பந்தயம் கட்டியவர் தனது முச்சக்கர வண்டியை இழந்திருக்கின்றார்.

இவரைப் போல் மேலும் பலர் தமது முச்சக்கர வண்டிகளை இழந்திருக்கின்றனராம். மீன் கடை, பாபர் வீதி, புதுக் கடை ஆகிய பகுதிகளில் இத்தகைய சூதாட்டங்கள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

சூதாட்டத்தில் பங்கு பற்றி வெற்றியீட்டிய ஒருவருடன் உரையாடிய போது, ' எனது ஒருநாள் வருமானம் 500 ரூபாதான். இலங்கை இந்தியா ஆட்டத்தின் போது நான் 5 ஆயிரம் ரூபாவுக்குப் பந்தயம் கட்டினேன். அதனால் எனக்கு 5 ஆயிரம் ரூபா கிடைத்துள்ளது' என்றார்.

இன்னொரு போட்டிக்காகப் பந்தயம் கட்டி வெற்றியடைந்தவரிடம் நீங்கள் பந்தயத்தில் தோல்வியுற்றால் என்ன செய்வீர்கள் எனக் கேட்ட போது 'ஏற்கனவே வெற்றியடைந்து விட்டேன். அதை வைத்து சமாளிக்க வேண்டியது தான்' என்று கூறினார். (ச)



இலங்கை வங்கி ஊர்காவற்றுறைக்கிளையின் நீடித்த கருமபீட சேவை அண்மையில் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் திறந்து வைக்கப்பட்டது. விழாவில் வண பிதா. ஜேசுதாசன் அடிகளார் மங்கள விளக்கேற்றுவதையும் அதில் பிரதம விருந்தினரும் உதவிப் பொது முகாமையாளருமான (வடபிராந்தியம்) பி.ஏ.அருமைநாயகமும் கிளைமுகாமையாளர் என். சச்சிதானந்தனும் காணப் படுகின்றனர்.


திருமண அழைப்பு

சிரஞ்ஜீவி சிவசங்கர சர்மா (மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில், ஆசிரியர் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

சௌபாக்கியவதி கானப்பிரியா (ஆசிரியை யா/கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.)

முகூர்த்தம் :- 28.03.2007 புதன் (பங்குனி 14ஆம் நாள்)
மு.ப.9.26-11.02 மணிவரை

இடம் :- கோப்பாய் தெற்கு, ஸ்ரீ வீரபத்திரஸ்வாமி கோவில் மண்டபம்

வரவேற்பு உபசாரம் :- 29.03.2007 வியாழன் மாலை 3 மணிமுதல் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

ஸ்ரீமதி .லலிதாம்பாள் நாகேஸ்வரசர்மா, மயிலணி, சுன்னாகம்.

சிவஸ்ரீ.சி. ஜோதீந்திரக் குருக்கள் ஞானப்பூங்கோதை, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(839)


### முகாமை உதவியாளர் தரமுயர்த்தல் பரீட்சை

# சேவைச் சான்றிதழ் அனுப்புமாறு விண்ணப்பதாரிகளுக்கு அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

மாகாண முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II யைச் சேர்ந்த அலுவலர்களை வகுப்பு I தரம் உயர்த்துவதற்கான பரீட்சைக்கு விண்ணப்பித்த சில திணைக்களங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் திருப்திகரமான சேவை பற்றிய சேவைச் சான்றிதழை இணைக்காமையினால் விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க முடியாமல் உள்ளதாகவும் சேவைச் சான்றிதழை அனுப்பி வைக்காத உத்தியோகஸ்தர்கள் அதனை மறுதபாலிலோ அல்லது தொலைநகல் மூலமோ உடனடியாக அனுப்பிவைக்குமாறு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலளர் திருமதி து.விஜயலட்சுமி அறிவித்துள்ளார்.

சேவைச் சான்றிதழை இணைக்காது விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளின் பெயர் விபரங்கள் வருமாறு,

கே.சைவசிகாமணி (யாழ்.மாநகர சபை), எ.மகேஸ்வரன்(யாழ். மாநகரசபை), ஆர்.ரட்ணலிங்கம் (யாழ்.மாநகரசபை), பி.விமலதாசன் (கட்டடத் திணைக்களம்), கே. திருக்குமாரி (விவசாய உதவிப் பணிப்பாளர் திணைக்களம்),ஜி. வாசுதேவன்(வடமராட்சி கல்வி வலயம்), வி.ரவீந்திரன்(தென்மராட்சி கல்வி வலயம்), வை.தெய்வேந்திர மூர்த்தி (தென்மராட்சி கல்வி வலயம்), ரி.கமலாம்பிகை(சாவகச்சேரி), எஸ்.சுப்பையா (நகரசபை காவலாளி), சி.கேதீஸ்வரி (நல்லூர் பிரதேச சபை), ஜி.சாந்தினி(யாழ்.கல்வி வலயம்).ப.பிரகலாதன் (யாழ்.கல்வி வலயம்),எஸ்.மங்களேஸ்வரி (யாழ். கல்வி வலயம்), எம்.சந்திரமாதேவி (யாழ்.கல்வி வலயம்),ஆர். சிறிரஞ்சினி (உள்ளூராட்சி திணைக்களம்), எ.பிரதாபன்(யாழ்.கல்வி வலயம்), எஸ்.ரி.தர்மரட்ணம் (யாழ். பிரதேச சபை). (ச-5)

# குழந்தைகளுக்கான பால்மா விலைகள் விரைவில் உயரும்?

குழந்தைகளுக்கான பால்மா வகைகளின் விலைகள் எதிர்வரும் காலத்தில் உயர்வடையலாம் என வர்த்தக சந்தையை மேற்கோள் காட்டி இலங்கை வர்த்தக ஒன்லைன் என்ற இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது 140-175 ரூபாவுக்கு விற்பனையாகும் பால்மா பைக்கெற்றின் விலை 200, 225 ரூபாவரை உயரலாம் எனவும்அந்த இணையத் தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

உலகச் சந்தையில் பால்மா வகைகளின் விலைகள் பெருமளவு உயர்ந்துள்ளதன் காரணமாகவே இந்த விலையுயர்வு ஏற்படும் நிலை காணப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது. (ச)

# உள்ளூராட்சி மன்றங்கள், மாகாண சபைகள் நினைத்தபடி செயற்பட முடியாது

## சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் நினைத்தவாறு தான்தோன்றித்தனமாக செயற்பட முடியாது. எந்தவொரு சட்டத்தையும் மாற்றியமைக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உண்டு என்று சபாநாயகர் வி.ஜே.மு.லொக்குபண்டார சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாய்மூல கேள்வி நேரத்தின் போது மொறட்டுவ மாநகர சபை தொடர்பாக ஜே.வி.பியினால் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சர் ஜெனக பண்டார தென்னக்கோன் பதிலளித்தார்.

இதன்போது உள்ளூராட்சிமன்றங்களின் அதிகாரங்கள் மற்றும் எம்.பிக்களின் தலையீடு தொடர்பாக பல எம்.பிக்கள் சபையில் கருத்துத் தெரிவித்தனர்.சர்ச்சையிலும் ஈடுபட்டனர்.

இங்கு குறுக்கிட்டுக் கருத்துக் கூறிய சபாநாயகர், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் கிடைத்ததால் நாட்டின் அரசியலமைப்பையே மாற்றலாம். பாராளுமன்றம் நினைத்தால் எதனையும் செய்ய முடியும். உள்ளூராட்சி மன்றங்கள் நினைத்தவாறு தான்தோன்றித்தனமாகச் செயற்பட முடியாது.

உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயும் உரிமை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு. சட்டத்தை இயற்றும் இடம் பாராளுமன்றம் ஆகும். அதனை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்கள் உட்பட அனைத்து அமைப்புக்களும் சட்டத்தை மதித்து நடக்க வேண்டும். எந்தவொரு விடயம் தொடர்பாகவும் விளக்கம் கூறும் உரிமை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு என்றார். (ந-5)


ஆனந்தி திருமணசேவை

அழகிய தோற்றம், கிரகபாவ சங்கியை 38, அவிட்ட நட்சத்திரம் 6- ல் செவ்வாய், 1975 இல் பிறந்த டுபாயில் பணியாற்றும் விடுமுறையில் வந்து நிற்கும் ஆண்மகனுக்கும் (V)

சைவ செட்டிய பகுதி, 1970 - ல் பிறந்த கிரகபாவ சங்கியை 31 1/2 புனர்பூச நட்சத்திரம், நட்புப் பெற்ற 7 இல் செவ்வாய் கொண்ட பெண்மணிக்கும் மணமக்களை தேடுகின்றோம்.நேரடியாக. தபால் மூலமும் தொடர்பு கொள்ளலாம். சோதிடர் V.A. சிவராசா, 56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (843)

அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில் இணுவில் - மருதனார்மடம்

ஸ்ரீ ராமநவமியும் பஞ்சரத்தினக் கீர்த்தனை ஆராதனையும்

27.03.2007

காலை 8.00 - சங்கற்பம்

8.30 - 10.30 மணி வரை

கலைஞர்களின் பஞ்சரத்தின கீர்த்தனை ஆராதனையுடன்

திரவிய அபிஷேகம்

நவகலச அபிஷேகம்

விசேட பூஜை நடைபெறும்.

12.00 - மகேஸ்வர பூஜை (அன்னதானம்)

குறிப்பு :- திருமதி ஞானகுமாரி சிவநேசன் அவர்களின் அனுசரணையுடன் பஞ்சரத்தின கீர்த்தனை ஆராதனை நடைபெறும்.

சகல கலைஞர்களும் பங்குபற்றி ஸ்ரீ ராமரின் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

(C-661) ஓம் ராம! ஸ்ரீ ராம! ஜெயராம! ஓம்!

அளவுக்கு மீறிய தற்செருக்குத்தான் உண்மையில் அவர்களின் தவறான செயல்கள் அனைத்துக்கும் மூல காரணமாக இருக்கின்றது.

-பிளேட்டோ

வலம்புரி

# உலகையே பயமுறுத்தும் இலங்கையின் சீற்றம்

இலங்கையை எவரும் பயமுறுத்த முடியாது என இலங்கைக்கான ஜெனீவாத் தூதுவர் தயான் ஜயதிலக்க ஐ.நா. சபையின் உரிமைகள் சபைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும், ஈராக்கிற்கு அடுத்தபடியாக ஆட்கடத்தல், கொலை என்பன இலங்கையில் இடம்பெறுவதாகவும் அரச சார்பற்ற அமைப்புகள் ஐ.நா. சபைக் கூட்டத்தில் தெரிவித்திருந்தன.

இதற்குப் பதிலளிக்கும் போதே இலங்கைக்கான ஜெனீவாத் தூதுவர் தயான் ஜயத்திலக்க இலங்கையை எவரும் பயமுறுத்த முடியாது எனக் கூறியுள்ளார்.

இதேவேளை எமது நாட்டின் உள் விவகாரங்களில் மூக்கை நுழைக்க எந்த வல்லரசையும் விடமாட்டோம். எவ்வளவு பெரிய வல்லரசாகவும் இருக்கலாம். உங்களுடைய வேலையை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள். எங்கள் வீட்டு விவகாரங்களில் மூக்கை நுழைக்க வேண்டமென பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க கூறியுள்ளார்.

தயான் ஜயதிலக்க ஐ.நா.சபையிலும், பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கொழும்பிலும் மேற்படி தமது எச்சரிக்கைகளை விடுத்துள்ளனர்.

இவர்களின் எச்சரிக்கையைப் பார்க்கும் போது உலக நாடுகள் கூட அச்சமுறும்போல் தோன்றுகின்றது. உள் நாட்டு விவகாரங்களில் தலையிடுவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என பிரதமர் கூறியிருப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதாயினும்,

உள் நாட்டு விவகாரம் என்பதற்கு ஓர் வரையறை உண்டென்பதை அவர் மறந்துவிடக் கூடாது.

அதாவது உள் நாட்டு விவகாரம் என்பதை தனித்து ஒரு தரப்பு மட்டும் தீர்மானிக்க முடியாது. மாறாக ஒரு நாட்டிற்குள் உரிமைப் போராட்டம் நடத்தும் மக்களும் அதனை உள் நாட்டு விவகாரமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அவ்வகையில் ஒரு தரப்பினர் தமது போராட்டம் உள் நாட்டு விவகாரமாகக் கணிப்பிடக் கூடியதல்ல. அதில் சர்வதேச சமூகம் தலையிட வேண்டுமெனப் பல வருடங்களாகக் கோருவார்களாயின் அங்கு உலக நாடுகளின் தலையீடு அவசியமாகும்.

உள் நாட்டு விவகாரம்,நாம் பேசித் தீர்ப்போம் எனப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரநாயக்க கூறுவது ஓர் பொருத்தமற்ற பேச்சாகும். ஏனெனில் பேசித் தீர்ப்போம் எனக் கூறியே இப்போது முப்பது வருடங்கள் கடந்து விட்டன.

அப்படியானால்எப்போது பேசுவது? எப்போது தீர்ப்பது? ஆக, ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஒரு நாட்டின் பிரதமர் என்ற அடிப்படையிலன்றி ஒரு இனத்தின் பிரதமர் என்ற அடிப்படையிலேயே பேசுகின்றார் என்பது புலனாகின்றது.

இவற்றுக்கப்பால் இலங்கையை எவரும் பயமுறுத்த முடியாது என ஐ.நா.சபையில் ஜெனீவாவுக்கான தூதுவர் தயான் ஜயதிலக்க கூறுவது சன் ரிவியில் தொடராக வெளிவரும் 'அரசி' நாடகத்தில் 'என்னை யாரும் பயமுறுத்த முடியாது' என ஜி.ரே.,பொலிஸாருக்குக் கூறுவது போல் இருக்கின்றது.

# மிக் விமான கொள்வனவுக் குற்றச்சாட்டு அரசாங்கம் விளக்கமளித்து அறிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தின் மிக்-27 ரக விமானக் கொள்வனவு தொடர்பாக ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக ஊடகங்களில் வெளியான தகவல்கள் இலங்கை அரசாங்கத்திற்கும் உக்ரைன் அரசாங்கத்திற்கும் இடையில் உள்ள இராஜதந்திர உறவுகளைப் பாதிப்படையச் செய்துள்ளதுடன் கிழக்கில் நடைபெறும் மனிதாபிமான பணிகளையும் பாதிக்கும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

இந்தக் கொள்வனவு தொடர்பான தவறான தகவல்கள் தேவையற்ற பிரசாரங்களை ஏற்படுத்துகின்றன. இது விடுதலைப்புலிகள் எமது விமானப் பலம் தொடர்பான, பெறுமதியான தகவல்களைப் பெற்றுக் கொள்ள வழிவகுக்கும்.

மேலும் இந்தத் தவறான தகவல்கள் எமது நாட்டிற்கும் ஏனைய நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவைப் பாதிப்பதுடன் ஆயுத விநியோகஸ்தர்களின் நல்லெண்ணத்தையும் பாதிப்படையச் செய்யும்.

அரசாங்கத்தினால் 2000 ஆம் ஆண்டு வடக்குக் கிழக்கில் மோதல்கள் உச்ச நிலையில் இருந்த வேளையில் ஒவ்வொன்றும் 18 லட்சத்து 82 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர் பெறுமதிக்கு மிக்-27 ரக விமானங்கள் 4 கொள்வனவு செய்யப்பட்டன.

பின்னர் அதே வருடம் ஒக்டோபர் மாதம் ஒவ்வொன்றும் 17 லட்சத்து 5 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர் பெறுமதிக்கு மேலும் மிக்-27ரக மூன்று விமானங்களும் 10 லட்சத்து 5 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பெறுமதிக்கு மிக்-23 ரக பயிற்சி விமானமும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

ஆனால் அவற்றின் ஆயுள்காலம் இரு வருடங்கள் தான். எனினும் ஒவ்வொரு விமானத்திற்கும் ஒரு லட்சத்து 55 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பணத்தை அரசு மேலதிகமாக செலுத்தி இந்த விமானங்களின் ஆயுள் காலத்தை மேலும் 2 வருடங்களுக்கு உயர்த்தியிருந்தது.

கொள்வனவு செய்யப்பட்ட ஏழு மிக் ரக விமானங்களில் 2001 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம்திகதி கட்டுநாயக்க விமானத்தளத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் சி.எவ்.-732 இலக்க முடைய மிக்-27 எம் ரக விமானம் அழிக்கப்பட்டிருந்தது.

மேலும் சீ.எவ்.-736 மற்றும் சீ.எவ்.-734 ஆகிய விமானங்கள் ஒகஸ்ட் 18 ஆம் திகதி 2001 ஆம் ஆண்டு ஜூன் 9 ஆம் திகதி 2004 இல் வீழ்ந்து நொருங்கியுள்ளன. தற்போது அரசாங்கத்திடமுள்ள மூன்று மிக்-27 எம். ரக விமானங்களும் ஒரு மிக்-23 யூ.பி. ரக விமானமும் ஜூலை 2004 ஆம் ஆண்டிலிருந்து மேலதிக திருத்த வேலைகளுக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

2000 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டதனை விட தற்போது அதிக விலையில் உக்ரீனின் நிறுவனத்திடமிருந்து விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

ஆனால் 2004 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட விமானங்களுக்கு 2006 ஆம் ஆண்டு அரசாங்கங்களுக்கும் இடையிலான உடன்படிக்கைகள் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட விமானங்களுக்கும் வேறுபாடுகள் உண்டு.

அதாவது 2006-ல் கொள்வனவு செய்யப்பட்ட விமானங்களை எதிர்வரும் 8 வருடங்களுக்குத் திருத்த வேலைகளுக்காக தரையில் நிறுத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை. முன்னைய கொள்வனவில் 2 வருடங்கள் ஆயுள் காலங்களையுடைய விமானங்கள் 18 லட்சத்து 82 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர்களுக்கு வாங்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது 8 வருடங்கள் ஆயுள்காலமுடைய விமானங்கள் 25 லட்சத்து 77 ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கு வாங்கப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# விவாகப் பதிவுக் கட்டணம் ஆயிரம் ரூபாவாக உயரும்!

(கொழும்பு)

விவாகப் பதிவுக் கட்டணத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது விவாகப்பதிவுக் கட்டணமாக 250 ரூபா அறவிடப்பட்டு வருகின்றது. 1994 ஆம் ஆண்டு பிறப்பு-இறப்பு, திருமணச் சட்டம் சீர் செய்யப்பட்ட பின்னர் முதல் தடவையாக இவ்வாறு இக் கட்டணத்தை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள் நாட்டலுவல்கள் அமைச்சர் கரு ஜெயசூர்ய கடந்த 20 ஆம்திகதி இக் கட்டண உயர்விற்கான அங்கீகாரத்தை அமைச்சரவையிலிருந்து பெற்றுக் கொண்டார். (ச)

# வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்திற்கு நன்றி தெரிவிப்பு

'யாழ் .அரச அதிபர் குற்றச்சாட்டு கூட்டுறவுச் சங்கங்கள் விளக்கமளிக்க வேண்டும்' என 15.03.2007 இல் வலம்புரியில் வெளியான ஆசிரியத் தலையங்கத்திற்கு நன்றி தெரிவித்து யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின் செயலாளர் பொ.சண்முக சுந்தரம் எழுதிய கடிதம் இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

-ஆசிரியர்

தங்களின் 2007.03.15ஆம் திகதிய வலம்புரிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட மேற்படி விடயம் தொடர்பான ஆசிரியர் தலையங்கத்தில் குடாநாட்டின் கூட்டுறவாளர்கள், கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள், கூட்டுறவுத்துறைப் பணியாளர்களின் உண்மை நிலையை வெளிக்கொணர்ந்தமைக்காக எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தங்களுடைய மேற்படி தலையங்கத்தில் சுட்டிக் காட்டியது போன்று முன்னரும் ஒரு தடவை அரச அதிபர் கூட்டுறவுச் சங்கங்களின் சேவையில் குறைபாடுகள் இருப்பதாகக் கூறியதாகச் செய்திகள் வெளியாகி இருந்தன. எனினும் 13.03.2007ஆம் திகதிய கூட்டத்தில் அரச அதிபர் கூறியதாக குடாநாட்டின் சில பத்திரிகைகள் பிரசுரித்திருந்த செய்திகள் தொடர்பாக எமது நிலைப்பாட்டினை அரச அதிபருக்குக் கடிதமூலம் தெரிவித்துள்ளோம். அதன் பிரதியை தங்களுக்கும் அனுப்பி வைக்கின்றோம்.

மேலும் இன்றைய நிலையில் நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் எமது கூட்டுறவு நிறுவனங்களும் பணியாளர்களும் எத்தகைய சேவைகளை ஆற்றுகின்றனர் என்பதை ஆசிரியர் தலையங்கத்தில் கோடிட்டுக் காட்டியமையையிட்டு கூட்டுறவாளர்கள், கூட்டுறவுப் பணியாளர்கள் சார்பில் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொ.சண்முகசுந்தரம்
செயலாளர்
யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை

# யாழ்ப்பாண மாவட்ட உணவு விநியோகமும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளும்

யாழ்.குடாநாட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி தொடர்பில் (வலம்புரி தவிர்ந்து) யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவர் பெ.கனகசபாபதி, யாழ்.அரச அதிபருக்கு எழுதிய கடிதம் வாசகர்கள் அறியும் பொருட்டும் நடுநிலை கருதியும் இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

-ஆசிரியர்

மேற்படி விடயம் சம்பந்தமாக கடந்த 13.03.2007 திகதியன்று மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பேர்து தங்களால் தெரிவிக்கப்பட்டதாக 14.03.2007 திகதிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட செய்திகள் மற்றும் சூரியன் வானொலியில் ஒலிபரப்பப்பட்ட செய்திகள் தொடர்பாக பின்வரும் உண்மை நிலைமைகளைத் தங்களுக்கு முன்வைக்க விரும்புகின்றோம்.

மேற்படி கலந்துரையாடலின் போது தங்களால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் முழுவதும் தொகுக்கப்பட்டு அல்லது சாராம்சங்களாவது தொகுக்கப்பட்டு வெளியிடப்படாததோடு பத்திரிகைகளும் , வானொலியும் இச்செய்திகளை தாம் விரும்பியவாறு செய்திகளாக்கி வெளியிட்டுள்ளமை கூட்டுறவாளர்களுக்கும், கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளுக்கும் ,கூட்டுறவுப் பணியாளர்களுக்கும் மிகுந்த மனவேதனையை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி முதல் ஏற்பட்ட அசாதாரண நிலை காரணமாக கூட்டுறவுச் சங்கங்கள் தம்வசமிருந்த கையிருப்புப் பொருட்களை பங்கீட்டு அடிப்படையில் வழங்க ஆரம்பித்தன. இந்த ஒரு தடவை மட்டும் தான் பங்கீடு சம்பந்தமாக கூட்டுறவுச் சங்கங்கள் சுயமாக தமது பொறுப்பில் தீர்மானங்களை எடுத்துச் செயற்பட்டன.

அதன்பின் அரச அதிபராகிய தங்களால் மக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் பொருட்களை வழங்கவென எமக்கு வழங்கிய பொருட்கள் தங்களினதும் அந்தந்த பிரதேச செயலர் அவர்களினதும் அறிவுறுத்தல், ஆலோசனை,வழிகாட்டல் என்பவற்றிற்கு அமையவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இச்செயற்பாடு முதலாம் கட்டப் பொருள் விநியோகம் தொடக்கம் இன்றுவரை இடம்பெற்று வருகின்றது. ஒவ்வொரு கட்ட விநியோகத்தின் போதும் ஒவ்வொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினதும் பங்கீட்டு அட்டைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பொருட்கள் ஒதுக்கப்பட்டு அவற்றை நாம் அரசாங்க களஞ்சியத்தில் இருந்து பெற்றுக்கொண்டதும் தங்களினதும், பிரதேச செயலாளரினதும் அறிவுறுத்தலுக்கு அமைய பங்கீடு செய்து வந்துள்ளோம்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் எப்போதுமே மேலதிக இருப்புக்கள் தேங்கி இருக்கவில்லை. இருந்தபோதிலும் அரச களஞ்சியங்களில் இருந்து பொருட்கள் வழங்கும் முறையை மாற்றி கப்பலில் இருந்து நேரடியாக சங்கங்களுக்கு பொருட்களை அனுப்பி களஞ்சியப்படுத்தும் நடைமுறையைக் கொண்டு வந்தபோது பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டதுக்கும் விநியோகத்திற்கான தங்களின் அல்லது பிரதேச செயலர் அவர்களினதும் விநியோக அறிவித்தல் கிடைப்பதற்கும் காலதாமதம் ஏற்படுகின்றது.

மேலும் தவறு இழைக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மீது தாங்கள் நடவடிக்கை எடுப்பதற்கு நாம் எமது பூரணமான ஒத்துழைப்பைத் தங்களுக்கு வழங்குவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். எல்லா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுமே சீராகச் செயற்படுவதில்லை என்று பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருப்பது பொருத்தமற்றது எனக் கருதுகின்றோம்.

குடாநாட்டில் ஆகஸ்ட் 11ஆம் திகதி ஏற்பட்ட அசாதாரண நிலை காரணமாக மக்களுக்கான பொருள் விநியோகத்தைச் சீராக்க தாங்களும், பிரதேச செயலர்களும் எடுத்த முயற்சிகளை எமது கூட்டுறவாளர்களும் , கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களும் எம்மால் இயன்ற அளவு கால ,நேரம் பார்க்காது கஷ்ட நஷ்டங்கள் பாராது, விசுவாசமாக, ஊதியத்திற்கான ஒரு தொழில் எனக் கருதாது மக்களுக்குச் செய்யும் சேவையாகவே கருதி எம்மால் இயன்ற அளவுக்கு ஒத்துழைப்பை வழங்கி வருகின்றோம்.

இச்சந்தர்ப்பத்தில் இவ்விடயம் தொடர்பில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்ட களங்கத்தை நீக்குவதற்கு தாங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

பெ.கனகசபாபதி
தலைவர்
யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை

# இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த சர்வதேச உதவி அமைப்புக்கள் தடுக்கின்றன!

## அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**சர்வதேச அமைப்புக்கள் இடம் பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்த விடாது தடுத்து வருவது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு விசாரணைகளை மேற்கொள்ள உள்ளதாக முக்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

சில சர்வதேச நிறுவனங்கள் மட்டக்களப்பில் இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர வேண்டாம் என தடுத்து வருகின்றன இது எமக்கு ஆச்சரியமானது. ஏன் இந்த நிறுவனங்கள் மக்க ளின் நம்பிக்கையை இழக்கச் செய்து அரசாங்கத்தின் மீளக் குடியமர்வுத் திட்டத்தை பாதிப்படையச் செய்கின்றன என்பது எமக்குத் தெரிய வேண்டும்.

இந்த அமைப்பின் பிரதிநிதிகள் இடம் பெயர்ந்தோர் தங்கி யிருந்த முகாம்களுக்கு சென்று தமது கிராமங்களுக்கு திரும்பு வதற்கு ஆயத்தமாகும் அங்குள்ள மக்களை எச்சரித்து வருகின்றனர் என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பெருமளவு துண்டுப் பிரசுரங்களையும் அவர்கள் விநியோகித்து வருகின்றனர். அந்த பிரசுரங்களில் மக்களை முகாம்களில் தங்கியிருக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்களின் இத்தகைய முயற்சிகளின் பின்னால் விடுதலைப்புலிகள் இருக்கலாம் என நாம் எண்ணுகின்றோம். எனவேதான் அமைச்சு விசாரணைகளை மேற்கொள்ள திட்ட மிட்டுள்ளது என அவ் அதிகாரி கூறியுள்ளார்.

இதேவேளை அரசாங்கத்தின் மீளக்குடியமர்வுத்திட்டத்தை சர்வதேச நிறுவனங்கள் குழப்புவதற்கு அரசாங்கம் அனுமதிக் கப் போவதில்லை என பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; அனைத்துலக நிறுவனங்கள் மீளக்குடியமரும் மக்களுக்கு தமது உதவிகளை நிறுத்தப் போவ தாக மிரட்டியிருப்பது கண்டிக்கத்தக்கது என்றார்.

இந் நிலையில் இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகள் தொடர்பாகவே துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துள்ளோம் என ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான பணிகளுக்கான வதிவிட இணைப்பாளருக்கான பேச்சாளர் ஒலரா கிளிங்டன் தெரிவித்துள்ளார். .

துண்டுப் பிரசுரங்கள் மூன்று மொழிகளிலும் வீட்டுக்குத் திரும்புதல் என்னும் தலைப்பில் அச்சிடப்பட்டுள்ளன. அதில் வீட்டுக்குத் திரும்புதல் அல்லது முகாம்களில் தங்கியிருத்தல் போன்றன தொடர்பான முடிபுகளை மக்கள் எடுப்பதற்குரிய தகவல் கள் உள்ளன. மேலும் பாதுகாப்புக்குரிய நிபந்தனைகள் பல வந்தமாக மீளக்குடிய மர்த்துதல் தொடர்பான தகவல்களும் உள் ளன.

மார்ச் 20 ஆம் திகதி வரையில் 41 ஆயிரத்து 604 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 58 ஆயிரத்து 451 மக்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம் பெயர்ந்துள் ளனர். இருந்த போதும் 10 ஆயிரத்து 150 பேர் வாகரையில் தமது இடங்களுக்கு திரும் பியுள்ளனர். 3 ஆயிரத்து 32 பேர் திருகோ ணமலைக்குத் திரும்பியுள்ளனர் என்றார் அவர். (சு)

## ஜே.வி.பியின் முக்கிய தலைவர் நாட்டிலிருந்து வெளியேறினார்

(கொழும்பு)

ஜே.வி.பியின் தலைவர்களில் ஒருவரான குமார் ஐயா என அழைக்கப்படும் கே.குண ரட்ணம் தனது குடும்பத்துடன் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். ஜே.வி.பியின் அரசியல் நடவடிக்கைகளில் இவர் மிகவும் முக்கிய பங்காற்றி வந்தவர் என தெரிவிக்கப்படுகின்றது.

ஜே.வி.பியின் தலைவராக இரகசியமாக இயங்க வந்த குமார் ஐயாவை அரசாங்கத்தின் புலனாய்வுத்துறையும் குற்றப்புலனாய்வுப்பிரிவும் குறிவைத்ததால் அவர் மிக விரைவாக தனது குடும்பத்துடன் வெளியேறியுள்ளார்.

அவரின் பாதுகாப்புக் கருதி ஜே.வி.பியின் மத்திய குழுவே அவரை நாட்டை விட்டு வெளியேறும்படி ஆலோசனை வழங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

குமார் ஐயா வின் முடிபுகள் எடுக்கும் செயற்பாடுகள் தொடர்பாக ஜே.வி.பியின் மற்றொரு முக்கிய தலைவரே பொலிஸாருக்கும் புலனாய்வுத் துறைக்கும் தகவல் கொடுத்ததாக சில தகவல் கள் தெரிவித் துள்ளன.

இந்த முன்னணித் தலைவர் பொலிஸாரின் இரகசியப் பிரிவினருடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளதாகவும் புலனாய்வு அமைப்பு,குமார் ஐயாவைப் பின் தொடர்வதற்கும் இவரே காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்திற்கான ஆதரவை விலக்கியது, அமைச்சரவையில் பங்கெடுக்க மறுத்தது போன்ற ஜே.வி.பியின் முக்கிய முடிபுகளுக்கு பின்னணியில் குமார் ஐயாவே இருந்துள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர் நாட்டை விட்டு வெளியேறியபோது தனது மனைவியையும் வத்தளை அனைத் துலக பாடசாலையில் கல்வி கற்று வந்த தனது ஒரே பிள்ளையையும் தன்னுடன் அழைத்துச் சென்றுள்ளார் எனக் கூறப்படு கின்றது. (எ-5)

## அரச செலவில் கிரிக்கெட் காண்பதற்கு செல்லவிருந்த பலருக்கு ஜனாதிபதி தடை

(கொழும்பு)

இலங்கை அணியின் முதற்பிரிவு வெற்றியை அடுத்து அரசாங்கச் செலவில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு கிரிக்கெட் போட்டி காணச் செல்ல முயன்ற பலரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தடுத்துள்ளதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையான சிறிலங்கா கிரிக்கெட்டின் இடைகால நிர்வாகத்தின் செயலாளர் கே.மதிவாணன்; விளையாட்டுத்துறை அமைச்சர் ,அமைச்சின் செயலாளர் உட்பட 15 பேரும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிலிருந்து ஐந்து பேருமாக சுமார் 20 பேர் வரையில் சுமார் 23 மில்லியன்கள் அரச செலவில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு செல்லவிருந்தனர்.

ஆனால் ஜனாதிபதி தலையிட்ட பின்னர் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க, தற்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் காமினி லொக்குகே மற்றும் அமைச்சரவை அந்தஸ்து அற்ற விளையாட்டுத்துறை அமைச்சர் பந்துல பஸ்நாயக்க ஆகியோரிற்கே அனுமதி வழங்கப் பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதனால் கிரிக்கெட் சபைக்கு ஏற்படவிருந்த செலவீனம் ரூபா 35 இலட்சமாக தற்போது குறைந்துள்ளதாகத் தெரிவித்த மதிவாணன் தனிப்பட்ட செலவில் செல்லும் அதிகாரிகளுக்கோ அமைச்சர்களுக்கோ எவ்வித தடையும் கிடையாது என்றும் கூறினார். (சு)

## வாகன விபத்தொன்றில் விமானப்படை அதிகாரி பலி

(கொழும்பு)

வீரவெல ஹம்பாந்தோட்டைப் பகுதியில் நேற்றுக் காலை விமானப்படையினரின் வாகனம் பாலத்துடன் மோதியதில் விமானப் படையினைச் சேர்ந்த கப்டன் தர அதிகாரி ஒருவரும் மற்றும் சார்ஜன்ட் தர அதிகாரி ஒருவரும் கொல்லப்பட்டு மற்றும் ஆறு விமானப்படையினர் காயங்களுக்குமுள்ளாகியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதன்போது உயிரிழந்தவர் ஹம்பாந்தோட்டை விமானப்படை முகாமிற்கு பொறுப்பானவர் என தெரியவரு கிறது.(ச-5)

## யாழ்.நகர மத்தியில் வைத்து...

சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் அந்தோனியார் வீதி, பெரியவிளானைச் சேர்ந்த சூசைதாஸன் டனிலால் ராஜ் (வயது 19); காந்திவீதி கொக்குவில் மேற்கைச் சேர்ந்த அருள்ராஜ் ஜெயந்தரூபன் (வயது 23) இணு வில் தியேட்டர் ஒழுங்கையைச் சேர்ந்த யோகலிங்கம் சாரங்கன் (வயது 21) என அவர்களது அடையாள அட்டைகளின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சம்பவம் இடம் பெற்ற இடங்களுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.நீதிவான் சடலங்களை பிரேதபரிசோதனைக்கான யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். சடலங்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (சு)

## கட்டுநாயக்க விமான ...

காயமடைந்ததாக விமானப் படைப் பேச்சாளர் குறூப் கப்டன் அஜந்த டி சில்வா தெரிவித்தார். காயமடைந்தவர்கள் உடனடியாக அம்புலன்ஸ் மூலம் நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இனந்தெரியாத ஹெலிகொப்டர் ஒன்று திடீரென விமான நிலையத்திற்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியதாகவும் அதன் மீது விமானப்படையினர் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் செய்தி அச்சுக்குப் போகும் வரை மேலதிக தகவல்கள் எதனையும் பெறமுடியவில்லை. இலங்கையில் உள்ள முதன்மை வாய்ந்த சர்வதேச விமான நிலையம் இது என்பதுடன் விமானப்படையின் முக்கிய தளமும் இங்குள்ள மை குறிப் பிடத்தக்கது.இவ் விமான நிலையம் மீது 2001 ஆம் ஆண்டும் தாக்குதல் நடத்தப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (சு)

## கடற்றொழிலுக்குச் செல்ல...

பரப்பில் கடற்படையினர் ஒத்திகையில் ஈடுபடும் தினங்களில் மீனவர் கள் தொழிலுக்குச் செல்வதற்கு அனுமதிக் கப்படுவதில்லை என்றும் வடமராட்சி வடக்கு பிரதேச மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

காலையில் வழமைபோல கடலுக்குச் செல்வதற்காக இராணுவத்தினரிடம் அனுமதி பெறச்செல்லும்போது மீன்பிடி தடைவிதிக்கப்பட்டுள்ளதாகக் கூறி மீனவர்கள் வீடுகளுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.இதனால் வருவாய் இன்றி தாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் உணவுக்கே திண்டாட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர். (எ)


## எலிம் சிறுவர் இல்லம்,மானிப்பாய்

### வேலையாட்கள் தேவை

மானிப்பாயில் அமைந்துள்ள எலிம் சிறுவர் இல்லத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

- ஆண்பிள்ளைகள் பராமரிப்பாளர்-ஆண் (35-50 வயது)
- தோட்ட வேலையாள் - ஆண் (35-50 வயது)

குறிப்பு:- விண்ணப்பதாரர் சுயவிபரக் கோவையுடன் உறவினர் அல்லாத அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் இருவரின் நற் சாட்சிப்பத்திரத்துடன் 10.04.2007 ஆம் திகதிக்கு முன் தபால் மூலம் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். நேரடியாக கொடுக்கப்படும் எந்த விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

நிர்வாகி
எலிம் சிறுவர் இல்லம்,
மெமோரியல் ஒழுங்கை,
மானிப்பாய்.

(780)


## சிறிபதி எம்.பியின்...

முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியராட்சி நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றி னை நிகழ்த்தவிருந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அவரை கைது செய்து விளக்க மறியலில் வைத்துள்ளமை தவறான செயற்பாடாகும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டி சம்பந்தப்பட்டவர்களை நாடாளுமன்றத்திற்கு அழைத்து காரணத்தை கண்டறிய வேண்டும் என சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்திருந் தார்.

இவ்வேண்டுகோள் கன்சாட்டிலும் பதி வாகியுள்ளது. இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாரம் சபாநாயகரை சந்தித்து உரையாடவுள்ளார். (சு)

## உத்தியோகபூர்வ...

தான் உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து இடம் பெயர தீர்மானித்துள் ளதுடன் தன்னிட முள்ள உத்தியோக பூர்வ பொருட்கள், வீடு மற்றும் வாக னங்கள் என்பவற்றை அரசாங்கத்திடம் கையளிக்க இருப்பதாகவும் தெரி வித்துள்ளார். (ச-5)






இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.03.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.